சார்பு நீதிமன்றம், மேட்டுப்பாளையம்

முன்னிலை : திரு.பெ.க. சிவகுமார்,

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்

2023 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

(திருவள்ளுவராண்டு 2052, சோபகிருது ஆண்டு சித்திரைத் திங்கள் 12 ஆம் நாள்)

அசல் வழக்கு .எண்.308/2018

CNR.No. TNCB190003922018

1. திருமதி. சுப்புலட்சுமி

2. திருமதி . எஸ். இந்திராணி

....வாதிகள்

-இடையே-

1. திரு.எம். முத்துசாமி

2. திருமதி. கே. சுலாச்சனா

....பிரதிவாதிகள்

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக 14.03.2023 ஆம் தேதியன்று விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு. கு. த. சிவப்புகழ், அவர்கள் முன்னிலையாகியும் 1 ம் பிரதிவாதி தரப்பில் வழக்குரைஞர் திரு. முகமது முபாரக் அவர்கள் முன்னிலையாகியும் பதிலுரை தாக்கல் செய்யப்பட்டும் 1 ம் வாதியை குறுக்கு விசாரணை செய்ய 1 ம் பிரதிவாதி நீதிமன்றத்தில் முன்னிலையாகாததால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், அழைப்பாணை சார்பு செய்யப்பட்டும் 2 ம் பிரதிவாதி நீதிமன்றத்தில் முன்னிலையாகாததால் 2 ம் பிரதிவாதிக்கெதிராக ஒருதலைபட்ச உத்திரவு பிறப்பிக்கப்பட்டும், ஆவண மற்றும் வாய்மொழி சாட்சியத்தை பரிசீலனை செய்தும் வாதிகள் தரப்பு வாதங்களைக் கேட்டும் இறுதியாக இன்று இந்நீதி மன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

01. பாகப்பிரிவினை வேண்டி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

02. வழக்குரையின் சுருக்கம் :-

2(1) வழக்குத் சொத்தானது ஆரம்பத்தில் ஒரு லிங்கைய கவுடருக்கு பாத்தியப்பட்டிருந்து அவர் வாதிகளின் தாத்தாவாகிய ரங்கப்ப கவுடருக்கு 01.06.1959 ம் தேதியில் விற்று விட்டார். ரங்கைய கவுடருக்கு வாதியின் தந்தை மாதைய கவுடர் மகன் ஆவார். வாதிகள் இருவரும் மாதைய கவுடரின் மகள்கள். 1ம் பிரதிவாதி மாதைய கவுடரின் மகன். கிரையம் பெற்ற தேதி முதல் வாதியின் தாத்தா ரங்கப்ப கவுடர் மேற்படி சொத்துக்களில் அனுபவ சுவாதீனத்தில் இருந்து அனுபவித்து வந்தார். வாதிகளின் தந்தை மாதைய கவுடரும் மற்றும் ஒரு காரமடை கவுடரும் ரங்கப்ப கவுடரின் மகன்கள்.

2(2) மேற்படி மாதைய கவுடரும், காரமடை கவுடரும் கூட்டு குடும்பமாக அனுபவித்து க.ச. எண். 849 ல் 2.98 1/2 காரமடை கவுடருக்கும் க.ச. எண். 850 ல் 3.12 ஏக்கர் பூமி மாதைய கவுடருக்கும்வாய்மொழியாக ஏற்பாட்டின்படி ஒதுக்கீடு செய்து தத்தமது தரப்பினர் அவ்வாறு அடைந்து அனுபவித்து வந்தனர். வாதிகளின் தந்தை மாதைய கவுடர் எந்த ஏற்பாடும் செய்யாமல் வாதிகளின் தந்தை 1ம் பிரதிவாதியின் பெயருக்கு வீட்டுச் சொத்தை செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் 19.06.1989 ல் கொடுத்துவிட்டார். மற்ற சொத்துக்களை பொறுத்து மாதைய கவுடர் எந்தவித ஏற்பாடும் செய்து வைக்காமல் 23.01.1994 ம் தேதியில் இறந்து விட்டார். வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதியும் தான் வழக்குச் சொத்தில் அனுபவ சுவாதீனத்தில் இருந்து வந்தார்கள். வாதிகள் பாகம் கேட்டும், 1ம் பிரதிவாதி பாகம் தர மறுத்துவிட்டார். வாதிகளின் பாகத்தை ஏமாற்றும் நோக்கத்துடன் தனது மகளான 2ம் பிரதிவாதியின் பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார். ஆகவே, வாதிகளுக்குரிய 2/3 பாகத்தை பாகப்பிரிவினை வழங்கி தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டும்.

03. <u>1ம் பிரதிவாதியின் பதிலுரையின் சுருக்கம்</u>

வாதிகள் தந்தை மாதைய கவுடரும், காரமடை கவுடரும் சொத்துக்களை பொறுத்து உரிய மறுபயனை பெற்றுக் கொண்டு 1ம் பிரதிவாதிக்கு ஒப்படைத்து அவர் அனுபவித்து வந்தார். தமக்கு உரிமைப்பட்ட சொத்தை 2ம் பிரதிவாதியின் பெயருக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார். வாதிகள் எந்த சமயத்திலும் வழக்குச் சொத்தில் கூட்டாக சுவாதீனத்தில் இல்லை. வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது.

04. வாதிகள் கோரிய வகையில் பாகப்பிரிவினை பரிகாரம் பிரதிவாதிகளுக்கெதிராக தீர்ப்பாண பிறப்பிக்க வேண்டுமா? என்பதே இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனையாகும்.

05. வாதிகள் தரப்பில் 1 சாட்சி விசாரிக்கப்பட்டு 8 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவோ, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவோ இல்லை.

06. வாதிகளின் வழக்குரை 1ம் பிரதிவாதியின் பதிலுரை மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்நீதிமன்றத்தால் வனையப்பட்ட வழக்கெழுவினார்கள் பின்வருமாறு.

(அ) தேவையான தரப்பினரை சேர்க்காததால் இவ்வழக்கு பாதிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) வழக்குச் சொத்தில் வாதிகளுக்கு ஏதேனும் பாகம் உள்ளதா?

(இ) வாதிகள் கோரியவாறு பாகப்பிரிவினை பரிகாரம் பெற வாதிகளுக்கு உரிமையுள்ளதா?

07. 1ம் பிரதிவாதி தரப்பில் பதிலுரை தாக்கல் செய்யப்பட்டிருந்தும், 1ம் வாதியை குறுக்கு விசாரணை செய்யாததால் 1ம் பிரதிவாதிக்கெதிராக ஒருதலைபட்ச உத்திரவு

பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆகவே மேற்கண்ட வழக்கெழுவினாக்களுக்கு தனித்தனியாக தீர்வு காண வேண்டிய அவசியமில்லையென இந்நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது. 1ம் வாதி தனது வழக்குரையை பின்பற்றி சாட்சியத்தை முன்வைத்துள்ளதோடு தங்களது வழக்கை நிரூபிக்க கிரையப்பத்திரம், இறப்பு சான்றிதழ் கடன் வைப்பு பத்திரம், வரவு செலவு ரசீதுகள் வழக்கறிவிப்பு, அஞ்சல் ஒப்புகை அட்டை , தானசெட்டில்மெண்ட் பத்திரம் ஆகிய ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் வாதியின் வாய்மொழி சாட்சியத்தையும், வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்களையும் ஒன்றினைத்து பரிசீலனை செய்கையில் வாதிகளும் 1ம் பிரதிவாதியும் சகோதர, சகோதரிகள் என்பதும், வழக்குச் சொத்துக்கள் ஆரம்பத்தில் வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதியின் தாத்தாவின் சுயசம்பாத்திய சொத்தென்பதும், வழக்குச் சொத்துக்களைப் பொறுத்து வாதிகளின் தந்தை எவ்வித ஆவணமும் இயற்றி வைக்காமல் இறந்துவிட்டாரென்பதும், வாதிகளும் 1ம் பிரதிவாதியும், கூட்டு அனுபவத்தில் இருந்து வந்துள்ளார்களென்பதும், தெளிவாகிறது. ஆகவே, வாதிகள் கோரிய பாகப்பிரிவினை பரிகாரத்தை வாதிகளுக்கு வழங்கலாமென இந்நீதிமன்றம் முடிவிற்கு வருகிறது.

8. இறுதியாக,

1. வழக்குச் சொத்துக்களில் வாதிகளுக்கு 2/3 பாகம் பாகப்பிரிவினை கிடைக்கத்தக்கதென தீர்ப்பளிக்கப்படுகிறது.

2. வழக்கின் செலவுத் தொகையை வாதிகளுக்கு பிரதிவாதிகள் செலுத்தவேண்டுமென ஆணையிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25 ஆம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஓம்/-பெ.க.சிவக்குமார்

சார்பு நீதிபதி,

மேட்டுப்பாளையம்,

## வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 01.06.1959 | கிரையப்பத்திரம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 01.06.1959 | கிரையப்பத்திரம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | 23.01.1994 | மாதைய கவுடர் இறப்பு சான்றிதழ் | நகல் |
| வா.சா.ஆ.4 | 07.09.2006 | கடன் வைப்பு பத்திரம் | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.5 | 06.01.2011 | வரவு செலவு ரசீது | சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.6 | 25.06.2018 | வழக்கறிவிப்பு | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.7 | 30.06.2018 | அஞ்சல் ஒப்புகை அட்டை | அசல் |
| வா.சா.ஆ.8 | 28.06.2017 | தான செட்டில்மெண்ட் பத்திரம் | சான்றிட்ட நகல் |

## சாட்சிகள் பட்டியல்

| வாதிகள் தரப்பில் | பிரதிவாதிகள் தரப்பில் |
|---|---|
| வா.சா.1.திருமதி. இந்திராணி | --இல்லை-- |

.

ஒம்/-பெ.க.சிவக்குமார்

சார்பு நீதிபதி,

மேட்டுப்பாளையம்,

# சார்பு நீதிமன்றம், மேட்டுப்பாளையம்

**முன்னிலை : திரு.பெ.க. சிவகுமார்,**

**சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்**

2022 ம் ஆண்டு ஜீலை திங்கள் 25 ஆம் நாள் திங்கட்கிழமை

(திருவள்ளுவராண்டு 2052, சுபகிருது ஆண்டு ஆடித் திங்கள் 9 ஆம் நாள்)

**அசல் வழக்கு .எண்.133/2018**

CNR.No. TNCB190006152017

திருமதி. எஸ்.சுமதி, க/பெ. சாந்தகுமார், இந்து, வயது 47 வருடங்கள், வசிப்பிட முகவரி கதவு எண்.57, வேளாங்கண்ணி நகர், காரமடை ரோடு, மேட்டுப்பாளையம் - 641 301. ....வாதி

-இடையே-

திருமதி.சுகுணா தேவி, க/பெ. முரளி, இந்து, வயது 50 வருடங்கள்,வசிப்பிட முகவரி, கதவு எண்.43/1, நர்மதா வீதி, நேரு நகர், (சிவன்புரம் காலனி), மேட்டுப்பாளையம் - 641 301.

....பிரதிவாதி

இந்த வழக்கானது ரூபாய்.3,75,332/-க்கு வருடத்திற்கு 24% வட்டியுடன் வாதிக்கு பிரதிவாதி கொடுக்க உத்தரவிடவேண்டுமாய் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நாள் - 07.10.2017 (மூன்றாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், கோயமுத்தூர்)

- 11.04.2018 (சார்பு

**நீதிமன்றம், மேட்டுப்பாளையம்)**

**வழக்கு மூலம் ஏற்பட்ட நாள் - மேட்டுப்பாளையம் தாலூக்கா, நீதிமன்றத்தின் ஆள்வரை எல்லைக்குட்பட்டு 24.01.2011, 01.11.2014, 20.09.2017, 21.09.2017 ஆகிய தேதிகளிலும் அதன் பின்னிட்டும் ஏற்பட்டுள்ளது.**

வழக்கு மதிப்பீட்டு விபரம் - இந்நீதிமன்ற ஆள்வரை மற்றும் நீதிமன்ற கட்டணத்தின் பொருட்டு வழக்கு மதிப்பு ரூ.3,75,332/-ம் மேற்படி வழக்கு மதிப்பிற்கு 1956-ம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்ற கட்டணங்கள் மற்றும் வழக்கு மதிப்பீட்டு சட்டம் பிரிவு 22 ன் படி கீழ் கட்டப்படும் நீதிமன்ற கட்டணம்ரூ.11,260/- செலுத்தப்பட்டுள்ளது.

<u>வழக்கு மதிப்பு குறிப்பு</u>

| | | |
|---|---|---|
| மொத்த மதிப்பு | - | ரூ.2,18,820/- |
| வருடத்திற்கு 24% வட்டி 01.11.2014 முதல் 07.10.2017 வரை | - | ரூ.1,56,512/- |
| | | ------------------- |
| மொத்தம் | - | ரூ.3,75,332/- |
| தமிழ்நாடு நீதிமன்ற கட்டணம் மற்றும் வழக்கு மதிப்பீட்டு சட்டம் பிரிவு 22-ன்படி நீதிமன்ற கட்டணம் | - | ரூ.11,260/- |

**இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் என் முன்பு 30.06.2022 ஆம் தேதியன்று விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்குரைஞர் திரு. நிர்மல்ராஜ், அவர்கள் முன்னிலையாகியும் பிரதிவாதி தரப்பில் வழக்குரைஞர்கள் திரு. ஆர்.ஸ்ரீனிவாசன், திரு. கேசவராஜ் மற்றும் திரு. விமல் பிரசாத், அவர்கள் முன்னிலையாகியும் , பதிலுரை தாக்கல் செய்யாததால் ஒருதலைபட்ச உத்தரவுபிறப்பிக்கப்பட்டு ஆவண மற்றும் வாய்மொழி சாட்சியத்தை பரிசீலனை செய்தும் வாதி தரப்பு வாதுரைகளை கேட்டும் இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.**

## தீர்ப்பாணை

1. வழக்கு தாக்கல் செய்த தேதியிலிருந்து இன்றைய தேதி வரை ரூபாய்.3,75,332/-க்கு வருடத்திற்கு 9% வட்டியுடனும் இன்றைய தேதியிலிருந்து தொகை வசூலாகும்வரை ஆண்டொன்றுக்கு 6% வட்டியுடனும் வாதிக்கு பிரதிவாதி இன்றிலிருந்து 2 மாத காலத்திற்குள் கொடுக்க வேண்டுமென ஆணையிடப்படுகிறது.

2. வழக்கின் செலவுத் தொகையை வாதிக்கு ரூ. பிரதிவாதி செலுத்த வேண்டுமென ஆணையிடப் படுகிறது.

## செலவுத் தொகை பட்டியல்

| வாதி தரப்பில்: | | பிரதிவாதி தரப்பில்: |
|---|---|---|
| வழக்குரைக்கு முத்திரை | - | --இல்லை-- |
| வக்காலத்துக்கு முத்திரை | - | |
| கட்டளைதாரருக்கு முத்திரை- | | |

2022 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 25-ம் நாள் திங்கட்கிழமை அன்று என் கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

சார்பு நீதிபதி,

மேட்டுப்பாளையம்.